# பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச் உலக தலைமையகம்

மெட்ரோபாலிட்டனின் அலுவலகம், செயின்ட் தாமஸ் சமூகம், குட்டப்புழா அஞ்சல், திருவல்லா - 689103 கேரளா, இந்தியா.689103.

# மேய்ப்பனின் கடிதம்

**அக்டோபர்/நவம்பர் 2024**

உங்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துகள்.

பேராயர்கள், குருமார்கள், டீக்கன்கள், சுவிசேஷகர்கள் மற்றும் சிஷ்டர்ஸ் ஆஃப் சிஸ்டர்ஸ், மற்றும் உலகளாவிய பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் திருச்சபையின் அனைத்து விசுவாசிகளாகிய உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும், ஆசீர்வாதங்களைம் தெரிவித்துக்கொள்கிறென்.

பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே. ஆமென்✠

கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே,

இயற்கைக்கு எப்படி பருவகாலங்கள் இருக்கின்றதோ அதைப் போலவே, பரிசுத்த திருச்சபைக்கும் உண்டு. நமது திருச்சபையின் ஆவிக்குறியப் பண்டிகைகள், தவ காலங்கள், ஜெப நேரங்கள், உபவாசம் மற்றும் சேவைகள் போன்ற காலங்கள் நாம் கிறிஸ்துவுக்குள் பலப்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஆதியாகமம் 8:22ல் நாம் வாசிக்கிறபடி: “பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை..." இந்த பருவங்களும் காலங்களும் நமக்கி சுமைகளாக இல்லை மாறாக அவைகள் ஆசீர்வாதங்களாக இருக்கின்றன, இதைப் போலவே திருச்சபையின் காலங்கள் நமது விசுவாசத்திலும், சாட்சியிலும், ஆழமாகவும், வலுவாகவும் வளர உதவுகிறது.

நவம்பர் மாதம் ஒரு புதிய வழிபாட்டு ஆண்டின் தொடக்கத்தைக் குறிக்கிறது, இது பரிசுத்த நாட்களைப் பற்றியதான அறிவிப்பு மற்றும் வருகைக்காக ஆயத்தத்தில் துவங்குகிறது. கடந்த ஆண்டைப் பற்றி சிந்திக்கவும் புதிய ஆண்டில் ஆவிக்குறிய பாதையை அமைக்கவும் இது ஒரு சிறந்த நேரமாகும். ஒருவேளை நீங்கள் வேதம் வாசிப்பதை புறக்கணித்திருக்கலாம், திருச்சபையில் பங்கேற்பதை தவறவிட்டிருக்கலாம் அல்லது ஆவிக்குறிய வாழ்கையில் சோர்ந்து போயிருக்கலாம். ஆனால் இப்பொழுது நாம் பரிசுத்த ஆராதனையில் தவறாமல் கலந்துகொள்ளவும், திருவிருந்து ஆராதனையில் பங்குகொள்ளவும் தீர்மானிப்போம், மற்றும் குடும்ப ஜெபங்களை தீவிரமாக்குவோம். தேவாலயத்தில், ஊழியங்களில் மிகவும் சுறுசுறுப்பாக ஈடுபட அற்பணிப்போம். தேவன் உங்களுக்குக் கொடுத்த கிருபைகளை பயன்படுத்தி அவருடைய திருச்சபையைக் கட்டியெழுப்பவும், தேவனின் அன்பைப் பகிர்ந்து கொள்ளவும் மற்றவர்களுக்கு உதவி செய்வோம்.

பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளுக்கு திருச்சபையின் நாட்காட்டியைப் பின்பற்ற கற்றுக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அவர்களின் ஆவிக்குறிய உருவாக்கம் வீட்டிலிருந்து தான் துவங்குகிறது – அது தான் அவர்களின் அஸ்திபாரம்; அவர்கள் ஜெபிக்கவும், உபவாசம் செய்யவும், ஏழைகளுக்கு உதவவும், சிறு வயதிலிருந்தே விசுவாசத்தோடு வாழவும் கற்றுக்கொள்வது மிகவும் முக்கியமாகும்.

வாலிபர்களுக்கு, பரி.பவுல் அப்போஸ்தலரின் வார்த்தைகளை நான் நினைவூட்டுகிறேன்:

*"உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு. (1 தீமோத்தேயு 4:12)*

இந்த புதிய ஆண்டில் நுழையும்போது, கிறிஸ்துவிலும் , பரிசுத்த சபையோடும் இனைந்து நம்மை மீண்டும் அர்ப்பணிப்பதற்கான ஒரு வாய்ப்பாக அமைத்துகொள்வோம்.

நமது தீர்மானங்கள், உலகப்பிரகாரமானவை போலல்லாமல் தேவ கிருபையிலும், பலத்திலும் வேரூன்றியதாக இருக்க வேண்டும,. மனித விருப்பத்தால் மட்டும் அல்லாமல் கிறிஸ்துவோடு ஒன்றாக பயணிப்போம். கிறிஸ்துவோடு வளர , தவ காலங்கள், பண்டிகைகளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதும் மற்றும் பணிவுடனும், மனந்திரும்புதலுடன் உபவாசங்களைக் கடைப்பிடித்தும், கிறிஸ்துவோடு கூட ஒரே சரீரமாக அங்கம் வைப்போம்.

நான் பரி.பவுலுடன் சேர்ந்து வேண்டிக்கொள்ளுகிறேன்.......

*"விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து , அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன் (எபேசியர் 3:17-19) .*

பரி.தியோடோகோஸ், அனைத்து பரிசுத்தவான்கள் மற்றும் புனிதர்களின் பரிந்துரைகள் மூலம் திருச்சபையிலும், உலகிலும், நம் வாழ்விலும், நம்மில் கிரியை செய்யும் திரியேக தேவனின் அளவிட முடியாத வல்லமையும், மகிமையையும் இப்போதும் எப்போதும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.✠.

**கிறிஸ்துவுக்குள் உங்கள் பிதா,**






**தேதி: 25 அக்டோபர் 2024**

**மோரான் மோர் சாமுவேல் தியோபிலஸ்**

**மெட்ரோபாலிட்டன்**

**இடம்: உலக தலைமையகம்**